# கொடைக்கானல் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விதி 2(1)ன் கீழ் 23.05.2022ஆம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள். 20.05.2022

**பொருள் எண். 1)**

அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1, நாள்.01.04.2022–ன்படி, சொத்துவரி மற்றும் காலிமனை வரி ஆகியவற்றிற்கு சொத்துவரி பொதுச் சீராய்வு மேற்கொள்ள அடிப்படை, மண்டல மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கொடைக்கானல் நகர்மன்றம் தீர்மானம் எண்.17, நாள்.11.04.2022ன்படி கீழ்கண்ட விபரப்படி சொத்துவரி மற்றும் காலிமனைவரி ஆகியவற்றிற்கான அடிப்படை மண்டல மதிப்பு நிர்ணயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

---

**சொத்துவரி:**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயித்தல் தொடர்பான அட்டவணை–I**

**I. சொத்துவரி**

| வ. எண் | தற்போதைய மண்டலம் | பழைய மண்டல மதிப்பு (ரூ) | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு சதுரடி | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு (ரூ) |
| 1. | A | 2.50 | **குடியிருப்பு** | | |
| | | | 600 சதுர அடி வரை | 1.25 | 3.125 |
| | | | 601–1200 | 1.50 | 3.75 |
| | | | 1201–1800 | 1.75 | 4.375 |
| | | | 1801 க்கு மேல் | 2.00 | 5.00 |
| | | | **குடியிருப்பு அல்லாதவை** | | |
| | | | கல்வி நிறுவனங்கள் | 1.75 | 4.375 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 4.375 |
| | | | வணிகம் | 2.00 | 5.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | B | 2.00 | **குடியிருப்பு** | | |
| | | | 600 சதுர அடி வரை | 1.25 | 2.50 |
| | | | 601–1200 | 1.50 | 3.00 |
| | | | 1201–1800 | 1.75 | 3.50 |
| | | | 1801 க்கு மேல் | 2.00 | 4.00 |
| | | | **குடியிருப்பு அல்லாதவை** | | |
| | | | கல்வி நிறுவனங்கள் | 1.75 | 3.50 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 3.50 |
| | | | வணிகம் | 2.00 | 4.00 |
| 3. | C | 1.50 | **குடியிருப்பு** | | |
| | | | 600 சதுர அடி வரை | 1.25 | 1.875 |
| | | | 601–1200 | 1.50 | 2.25 |
| | | | 1201–1800 | 1.75 | 2.625 |
| | | | 1801 க்கு மேல் | 2.00 | 3.00 |
| | | | **குடியிருப்பு அல்லாதவை** | | |
| | | | கல்வி நிறுவனங்கள் | 1.75 | 2.625 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 2.625 |
| | | | வணிகம் | 2.00 | 3.00 |
| 4. | D | 0.50 | **குடியிருப்பு** | | |
| | | | 600 சதுர அடி வரை | 1.25 | 0.625 |
| | | | 601–1200 | 1.50 | 0.75 |
| | | | 1201–1800 | 1.75 | 0.875 |
| | | | 1801 க்கு மேல் | 2.00 | 1.00 |
| | | | **குடியிருப்பு அல்லாதவை** | | |
| | | | கல்வி நிறுவனங்கள் | 1.75 | 0.875 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 0.875 |
| | | | வணிகம் | 2.00 | 1.00 |

**II. காலிமனைவரி**

| காலிமனைவரி | | | |
|---|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு (ரூபாயில்) | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு (ரூபாயில்) |
| A | 0.20 | 2 | 0.40 |
| B | 0.30 | 2 | 0.60 |
| C | 0.40 | 2 | 0.80 |

மேற்கண்டவாறு அடிப்படை மண்டல மதிப்பு உயர்வு செய்யப்பட உள்ள விபரத்தினை 13.04.2022 அன்று தமிழ் சுடர், இந்து தமிழ், Afternoon ஆகிய நாளிதழ்களில் மண்டல மதிப்பு உயர்வு செய்வது தொடர்பாக ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ, தபால் மூலமாகவோ அல்லது அலுவலக மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ தெரிவிக்குமாறு பொது மக்கள் அறியும் வண்ணம் வெளியிடப்பட்டுள்ளது. 12.05.2022ம் தேதியுடன் 30 நாட்கள் முடிவடைந்த போதும் சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக பொது மக்களிடம் இருந்து ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை. எனவே, இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.17, நாள்.11.04.2022ம் தேதிய மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளபடி மண்டல மதிப்பு உயர்வு செய்யவும், திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **63 , நாள்.23.05.2022** |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம்** : | |
| 23.05.2022ம் தேதிய நகர்மன்ற கூட்டத்தில், நகர்மன்ற துணைத் தலைவர் (21வது வார்டு), 8வது வார்டு, மற்றும் 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்களின் மூன்று ஆட்சேபனைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டது. அதன்படி, | |

ஆட்சேபணை எண்.1,

8வது வார்டு தெருக்கள் (1) முதலியார்புரம் 1வது தெரு 1வது குறுக்குத் தெரு, (2) முதலியார்புரம் 1வது தெரு 2வது குறுக்குத் தெரு, (3) முதலியார்புரம் 1வது தெரு 3வது குறுக்குத் தெரு, (4) முதலியார்புரம் 2வது தெரு 1வது குறுக்கு சாலை, (5) முதலியார்புரம் 3வது தெரு 1வது குறுக்கு சாலை ஆகிய தெருக்களின் சொத்துவரி மண்டலம் B என்பதை C என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்படுகிறது.

ஆட்சேபணை எண்.2,

16வது வார்டு தெருக்கள் (1) காமராஜர் சாலை 1வது குறுக்குத் தெரு, (2) காமராஜர் சாலை 2வது குறுக்குத் தெரு, (3) காமராஜர் சாலை 3வது குறுக்குத் தெரு, (4) காமராஜர் சாலை அறுப்புக் கூடம் முதல் அண்ணாநகர் சந்திப்பு வரை ஆகிய தெருக்களின் சொத்துவரி மண்டலம் B என்பதை C என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்படுகிறது.

ஆட்சேபணை எண்.3,

21 வது வார்டு (1) முனியாண்டி கோவில் தெரு, (2) லாஸ்காட் ரோடு (கோழிப்பண்ணை முதல் யுனிவர்சிட்டி பிரிவு வரை) ஆகிய தெருக்கள் 21வது வார்டிலிருந்து 20வது வார்டு எனவும், சொத்துவரி மண்டலம் B என்பதை C என்ற திருத்தத்துடனும் அனுமதிக்கப்படுகிறது.

ஒம்/–பா.செல்லத்துரை,
**நகர்மன்றத் தலைவர்,**
**கொடைக்கானல் நகராட்சி.**

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.